Process Safety Beacon
Messages for Manufacturing Personnel
www.aiche.org/ccps/process-safety-beacon
An AIChE Technology Alliance CCPS Center for Chemical Process Safety
aiche.org/ccps
This issue sponsored by ioMosaic
Minimizing risk. Maximizing potential.®
www.iomosaic.com

# Sense of vulnerability – a very important safety component

June 2023

## "அபாயங்களை நோக்கும் உணர்வு " - பாதுகாப்பின் ஒரு மிக முக்கிய கூறு




ஒருவர் கந்தக அமிலம் கையாளும் பகுதியில் செல்லும் பொழுது, ஆப்ரேட்டர் ஒருவர் நைட்ரஜன் ஹோஸ் இணைப்பை துண்டிக்க முயல்வதை பார்க்கிறார்.அப்போது ஆபரேட்டர் பணிக்கு உகந்த பாதுகாப்பு சாதனங்களையும் மற்றும் முக கவசமும் (பேஸ் சீல்டையும்) அணியவில்லை, உடனே அந்த நபர் ஆப்பரேட்டரை நிறுத்தி, பணியிட சூழ்நிலையில் உள்ள அபாயங்களை விளக்கியதால், உடனடியாக பாதுகாப்பு சாதனங்களை அவர் அணிந்து கொண்டார். முதல் நபர் சில அடிகள் நடந்த உடன், சல்பியூரிக் ஆசிட் பகுதியில் பெரிய சத்தம் கேட்டது. ஆபரேட்டர் மீது, அமிலம் பட்டு அவர் அருகில் உள்ள சேஃப்டி சவரை நோக்கி நகர்கிறார்.

ஆப்ரேட்டருக்கு தெரியாமல் சல்பியூரிக் ஆசிட் நைட்ரஜன் ஹோசில் பேக்கப் ஆகி உள்ளது. நைட்ரஜன் ஹோஸை துண்டிக்கும் பொழுது, உள்ளே இருந்த அழுத்தத்தால் கந்தக அமிலம் ஆப்ரேட்டரின் முகம் மற்றும் உடம்பின் மேல் தெளித்தது. ஆப்ரேட்டரின் கழுத்து பகுதியில் சில சிறிய காயங்களே ஏற்பட்டது, ஏனென்றால் அந்த நேரத்தில் அவர் தகுந்த பாதுகாப்பு சாதனங்களை அணிந்திருந்தார்.

விசாரணையின் பொழுது, ஆபரேட்டர் அணிந்திருந்த முக கவசத்தில் அமிலம் தெளித்த வடுக்கள் நிறைந்து இருந்தது. ஒருவேளை முக கவசம் இல்லாமல் இருந்திருந்தால் ஆபரேட்டர் மிகப்பெரிய ஆபத்தான காயங்களையும் மற்றும் பார்வை இழந்திருப்பதற்கான வாய்ப்புகளும் ஏற்பட்டிருக்கலாம்.

"அபாயங்களை நோக்கும் உணர்வு" அவரிடம் உள்ளதால், ஹோசினுள் அமிலம் இருப்பதற்கான வாய்ப்புகளை உணர்ந்து , அவரை தடுத்து நிறுத்தினார்

## உங்களுக்கு தெரியுமா?

"அபாயங்களை நோக்கும் உணர்வு " என்றால் என்ன? இதன் அர்த்தம் ,உங்கள் ஆலையில் உள்ள அனைவரும்:

- உங்கள் பகுதியில், பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் மற்றும் செயல்முறையில் உள்ள அபாயங்களை உணருதல்.
- பலவீனங்களின் அறிகுறிகளை தொடர்ந்து விழிப்புடன் கவனித்தல் . இது வரும் அபாயகரமான நிகழ்வுகளுக்கு மூல காரணமாக இருக்கலாம். ஒரு பைப் லைனில் ஏற்படும் மிகச்சிறிய கசிவு, பின்னாளில் பைப் லைன் உடையும் அளவிற்கு கூட உறு மாறலாம்.
- ஆலையில் பாதுகாப்பு விதிமுறைகள் இருந்தாலும் தொடர்ந்து விழிப்புடன் இருத்தல்.

- நம் தனிப்பட்ட வாழ்க்கையில் அபாயங்களை நோக்கும் உணர்வு தான், மோசமான வானிலையில் வாகனத்தின் வேகத்தை குறைக்க மற்றும் ஏணியில் வேலை செய்யும் பொழுது எச்சரிக்கையுடன் பணிபுரிய உதவுகிறது
- நாம் அவசர நிலையில் இருக்கும்பொழுது "அபாயங்களை நோக்கும் உணர்வு" குறைந்து விடும், இதனால் பின்பற்றக்கூடிய வழிமுறைகளையும் மற்றும் பாதுகாப்பு சாதனங்களையும் அணியாமல் செய்து விடும்
- புதிதாக வரும் பணியாளர்களின் "அபாயங்களை நோக்கும் உணர்வு" அவர்களின் முந்தைய பணியிட சூழலை பொறுத்தது. எனவே நம் பணியிடத்தில் உள்ள அபாயங்களை புரிந்து கொள்ள நாம் அவர்களுக்கு உதவ வேண்டும்.
- "அபாயங்களை நோக்கும் உணர்வு" தொடர்ந்து தக்க வைத்தல் பாதுகாப்பு கலாச்சாரத்திற்கு முக்கியமான தாகும்

## உங்களால் என்ன செய்ய முடியும்?

- நீங்கள் பாதுகாப்பற்ற நடவடிக்கைகளை பார்க்கும் பொழுது, நிறுத்தி அவர்களிடம் பாதுகாப்பான நடைமுறையை பின்பற்றுகிறீர்களா என்று கேளுங்கள்? . உங்களால் மற்றவர்களை அபாயகரமான ஆபத்துகளில் இருந்து நிச்சயம் காப்பாற்றப்பட முடியும்.
- உங்களை ஒருவர் நிறுத்தி எவ்வாறு பணிபுரிகிறீர்கள் என்று கேட்டால் அவர்களிடம் விவாதம் செய்யாதீர்கள். அவர்கள், உங்களை காப்பதற்காக முயற்சியினை மேற்கொள்கிறார். அவர்களுடைய கேள்விகளுக்கு அமைதியாக பதில் அளியுங்கள், அவர்கள் கூறும் வழிமுறைகளை மனதார ஏற்றுக் கொள்ளுங்கள் மற்றும் அவர்களுடைய வழிகாட்டுதலுக்கு நன்றி கூறுங்கள்.
- உங்கள் பணியிடத்தில், புதிய பணியாளர்கள் இருப்பின் உங்கள், பணியிடத்தில் உள்ள ஆபத்துக்களையும் வழிமுறைகளையும் அவர்களுக்கு கற்பியுங்கள் .அவர்கள் பாதுகாப்பாக பணிபுரிவதற்கு உதவுங்கள்.
- ஒருபோதும் இங்கே விபத்து நடக்காது என நினைக்காதீர்கள் நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

**Sense of Vulnerability – Your Process Safety "Spider Sense"**

"அபாயங்களை நோக்கும் உணர்வு" - உங்கள் செயல்முறை பாதுகாப்பின் "ஸ்பைடர் சென்ஸ்"

Note : Spider-Sense is ability to sense and react to danger before it happens.